(எட்டாவது பாராளுமன்றம் - இரண்டாவது கூட்டத்தொடர்)

இல. **26**.]

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2018 ஆகஸ்ட் 08, புதன்கிழமை பி.ப. 1.00 மணிக்கு

## சமுகமளித்தோர்:

**கௌரவ கரு ஜயசூரிய,** சபாநாயகர்

**கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

---

**கௌரவ ரணில் விக்கிரமசிங்க,** பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்

**கௌரவ வஜிர அபேவர்தன,** உள்நாட்டலுவல்கள் அமைச்சர்

**கௌரவ ஜோன் அமரதுங்க,** சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ மஹிந்த அமரவீர,** கமத்தொழில் அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) சரத் அமுனுகம,** விஞ்ஞான, தொழில்நுட்ப, ஆராய்ச்சி, திறன்கள் அபிவிருத்தி, தொழிற்பயிற்சி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சர்

**கௌரவ கயந்த கருணாதிலக்க,** காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசானும்

**கௌரவ அகில விராஜ் காரியவசம்,** கல்வி அமைச்சர்

**கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல,** அரச தொழில்முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சரும் பாராளுமன்றச் சபை முதல்வரும்

**கௌரவ நிமல் சிறிபால த சில்வா,** போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்

**கௌரவ எஸ். பீ. நாவின்ன,** உள்ளக அலுவல்கள் மற்றும் வடமேல் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,** புத்தசாசன அமைச்சர்

**கௌரவ ஹரின் பர்னாந்து,** தொலைத்தொடர்புகள் , டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் வெளிநாட்டுத் தொழில்வாய்ப்புக்கள் அமைச்சர்

**கௌரவ சஜித் பிரேமதாஸ,** வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர்

**கௌரவ (திருமதி) சந்திராணி பண்டார,** மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ சாகல ரத்நாயக்க,** இளைஞர் அலுவல்கள், கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) விஜயதாஸ ராஜபக்ஷ,** உயர்கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ மலிக் சமரவிக்ரம,** அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்

**கௌரவ ரவீந்திர சமரவீர,** தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன,** சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர்

**கௌரவ டி.எம். சுவாமிநாதன்,** மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ ரஊப் ஹகீம்,** நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சர்

**கௌரவ கபீர் ஹஷீம்,** நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ பி. ஹரிசன்,** சமூக வலுவூட்டல்கள் அமைச்சர்

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல,** உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,** சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ வசந்த அலுவிஹாரே,** கமத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லக்கி ஜயவர்தன,** நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,** தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ நிரோஷன் பெரேரா,** தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஏ. டி. பிரேமதாச,** பெருந்தோட்டக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பாலித ரங்கே பண்டார,** நீர்ப்பாசன, நீர் வளங்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர்

**கௌரவ இரான் விக்கிரமரத்ன,** நிதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்கிரம,** மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை இராஜாங்க அமைச்சர்

**கௌரவ திலிப் வெதஆரச்சி,** கடற்றொழில், நீரக வளமூல அபிவிருத்தி மற்றும் கிராமியப் பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லக்ஷமன் செனெவிரத்ன,** விஞ்ஞான, தொழில்நுட்ப, ஆராய்ச்சி, திறன்கள் அபிவிருத்தி, தொழிற்பயிற்சி மற்றும் கண்டி மரபுரிமைகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,** நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அசோக் அபேசிங்க,** போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் பிரதி அமைச்சர்

**கௌரவ லஸந்த அலகியவன்ன,** நிதி மற்றும் வெகுசன ஊடக பிரதி அமைச்சர்

**கௌரவ எட்வட் குணசேகர,** உள்ளக அலுவல்கள் மற்றும் வடமேல் அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ நலின் பண்டார ஜயமஹ,** அரச நிருவாக முகாமைத்துவ மற்றும் சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சர்

**கௌரவ புத்திக பத்திறண,** கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ கருணாரத்ன பரணவிதான,** விஞ்ஞான, தொழில்நுட்ப, ஆராய்ச்சி, திறன்கள் அபிவிருத்தி, தொழிற்பயிற்சி மற்றும் கண்டி மரபுரிமைகள் பிரதி அமைச்சர்

**கௌரவ இந்திக பண்டாரநாயக்க,** வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை பிரதி அமைச்சர்

**கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா,** தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்கம் மற்றும் அரசகரும மொழிகள் பிரதி அமைச்சர்

**கௌரவ அஜித் மான்னப்பெரும,** சுற்றாடல் பிரதி அமைச்சர்

**கௌரவ நிஷாந்த முதுஹெட்டிகமகே,** துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ ரன்ஜன் ராமநாயக்க,** சமூக வலுவூட்டல்கள் பிரதி அமைச்சர்

---

**கௌரவ ரோஹித அபேகுணவர்தன**

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன**

**கௌரவ லக்ஷமன் யாப்பா அபேவர்தன**

**கௌரவ துஷார இந்துனில் அமரசேன**

**கௌரவ ஆனந்த அலுத்கமகே**

**கௌரவ (கலாநிதி) சீ.மு. முகம்மட் இஸ்மாயில்**

**கௌரவ ரீ. பீ. ஏக்கநாயக்க**

**கௌரவ ரவி கருணாநாயக்க**

**கௌரவ அ. அரவிந்த் குமார்**

**கௌரவ வேலு குமார்**

**கௌரவ சந்திம கமகே**

**கௌரவ உதய பிரபாத் கம்மன்பில**

**கௌரவ நிஹால் கலப்பத்தி**

**கௌரவ தினேஷ் குணவர்தன**

**கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன**

**கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர**

**கௌரவ எஸ். எம். சந்திரசேன**

**கௌரவ டி.வீ. சானக**

**கௌரவ சிசிர ஜயகொடி**

**கௌரவ மலித் ஜயதிலக**

**கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ**

**கௌரவ அனுர சிட்னி ஜயரத்ன**

**கௌரவ அநுராத ஜயரத்ன**

**கௌரவ பியங்கர ஜயரத்ன**

**கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன**

**கௌரவ தயாசிறி ஜயசேகர**

**கௌரவ (திருமதி) சுமேதா ஜீ. ஜயசேன**

**கௌரவ க. துரைரெட்ணசிங்கம்**

**கௌரவ ஜனக பண்டார தென்னகோன்**

**கௌரவ எம்.எஸ். தௌபீக்**

**கௌரவ பியல் நிசாந்த த சில்வா**

**கௌரவ மொஹான் பிரியதர்ஷன த சில்வா**

**கௌரவ ரீ. ரன்ஜித் த சொய்சா**

**கௌரவ அநுர திசாநாயக்க**

**கௌரவ விமலவீர திசாநாயக்க**

**கௌரவ எஸ். பீ. திசாநாயக்க**

**கௌரவ சாலிந்த திசாநாயக்க**

**கௌரவ டக்ளஸ் தேவானந்தா**

**கௌரவ முஹம்மது நசீர்**

**கௌரவ வாசுதேவ நாணாயக்கார**

**கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்**

**கௌரவ கே.கே. பியதாஸ**

**கௌரவ சுசந்த புஞ்சிநிலமே**

**கௌரவ டிலான் பெரேரா**

**கௌரவ சனத் நிசாந்த பெரேரா**

**கௌரவ அருந்திக்க பர்னாந்து**

**கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து**

**கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே**

**கௌரவ அசோக்க பிரியந்த**

**கௌரவ ஏ. டி. சுசில் பிரேமஜயந்த**

**கௌரவ (திருமதி) ஹிருணிகா பிரேமச்சந்திர**

**கௌரவ எஸ். பிரேமரத்ன**

**கௌரவ பந்துல லால் பண்டாரிகொட**

**கௌரவ தாராநாத் பஸ்நாயக்க**

**கௌரவ தாரக்க பாலசூரிய**

**கௌரவ விஜித பேருகொட**

**கௌரவ எஸ்.எம். மரிக்கார்**

**கௌரவ இம்ரான் மஹ்ரூப்**

**கௌரவ (திருமதி) விஜயகலா மகேஸ்வரன்**

**கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க**

**கௌரவ எஸ்.சீ. முத்துகுமாரண**

**கௌரவ அநுர பிரியதர்ஷன யாப்பா**

**கௌரவ சீனித்தம்பி யோகேஸ்வரன்**

**கௌரவ பிமல் ரத்நாயக்க**

**கௌரவ சீ. பீ. ரத்நாயக்க**

**கௌரவ லொஹான் ரத்வத்தே**

**கௌரவ பிரசன்ன ரணதுங்க**

**கௌரவ இஷாக் ரஹுமான்**

**கௌரவ முஜிபுர் ரஹுமான்**

**கௌரவ ஹர்ஷண ராஜகருணா**

**கௌரவ சமல் ராஜபக்ஷ**

**கௌரவ காமினி லொக்குகே**

**கௌரவ ஜானக வக்கும்புர**

**கௌரவ (கலாநிதி) ஜயம்பதி விக்ரமரத்ன**

**கௌரவ ஏ.ஏ. விஜேதுங்க**

**கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன**

**கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன**

**கௌரவ சமிந்த விஜேசிறி**

**கௌரவ துலீப் விஜேசேகர**

**கௌரவ கஞ்சன விஜேசேகர**

**கௌரவ ஹேஷா விதானகே**

**கௌரவ ச. வியாழேந்திரன்**

**கௌரவ சந்திம வீரக்கொடி**

**கௌரவ விமல் வீரவங்ச**

**கௌரவ குமார வெல்கம**

**கௌரவ சி. சிறீதரன்**

**கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன்**

**கௌரவ (திருமதி) சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா**

**கௌரவ சந்தித் சமரசிங்க**

**கௌரவ ராஜவரோதயம் சம்பந்தன்,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ (டாக்டர்) சி. சிவமோகன்**

**கௌரவ அண்ணாமலை நடேசு சிவசக்தி**

**கௌரவ திலங்க சுமதிபால**

**கௌரவ எம்.ஏ. சுமந்திரன்**

**கௌரவ டபிள்யூ. டீ. ஜே. செனெவிரத்ன**

**கௌரவ மாவை சோ. சேனாதிராசா**

**கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி**

**கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி**

**கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்**

**கௌரவ கனக ஹேரத்**

**கௌரவ விஜித ஹேரத்**

திரு. நீல் இத்தவல, பதிற் பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திருமதி குஷானி ரோஹனதீர, உதவிச் செயலாளர் நாயகம்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. பத்திரங்களைச் சமர்ப்பித்தல் :** (1) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2014 ஆம் ஆண்டுக்கான இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகத்தின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை சர்வதேச தொடர்புகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(2) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2017 ஆம் ஆண்டுக்கான மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்த மேற்படி அறிக்கையை போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர்,

(i) 2017 ஆம் ஆண்டுக்கான மாத்தளை மாவட்டச் செயலகத்தின் செயற்றிறன் அறிக்கையும் ஆண்டுக் கணக்குகளும்; மற்றும்

(ii) 2017 ஆம் ஆண்டுக்கான பதுளை மாவட்டச் செயலகத்தின் வருடாந்த செயற்றிறன் அறிக்கையையும் கணக்குகளையும்

சமர்ப்பித்து மேற்படி அறிக்கைகளை உள்ளக நிருவாகம் மற்றும் அரச முகாமைத்துவம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2015 ஆம் ஆண்டுக்கான இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் ஆண்டு அறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை சுகாதாரம் மற்றும் மனித சேமநலம், சமூக வலுவூட்டல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(5) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர்,

(i) 2016 ஆம் ஆண்டுக்கான தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவகத்தின் ஆண்டறிக்கை;

(ii) 2016 ஆம் ஆண்டுக்கான இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையத்தின் ஆண்டறிக்கை;

(iii) 2016 ஆம் ஆண்டுக்கான தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் ஆண்டறிக்கை; மற்றும்

(iv) 2015/2016 ஆம் ஆண்டுக்கான களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை லிமிரெட்டின் ஆண்டறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கைகளை கமத்தொழில் மற்றும் காணி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(6) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2016 ஆம் ஆண்டுக்கான தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை சுகாதாரம் மற்றும் மனித சேமநலம், சமூக வலுவூட்டல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**2. குழு அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்:** (1) உள்ளக நிருவாகம் மற்றும் அரச முகாமைத்துவம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ காமினி லொக்குகே சார்பாக, அக் குழுவின் உறுப்பினர் கௌரவ நிஹால் கலப்பத்தி அக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட,

(i) 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்கான காலி மாவட்டச் செயலகத்தின் வருடாந்த செயற்றிட்ட அறிக்கைகள் மற்றும் கணக்குகள்;

(ii) 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்கான கேகாலை மாவட்டச் செயலகத்தின் செயலாற்றுகை அறிக்கைகளும் கணக்குகளும்;

(iii) 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்கான அம்பாறை மாவட்டச் செயலகத்தின் வருடாந்த செயலாற்று அறிக்கைகளும் கணக்கறிக்கைகளும்;

(iv) 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்கான மாத்தறை மாவட்டச் செயலகத்தின் செயற்திறன் அறிக்கைகளும் கணக்குகளும்;

(v) 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்கான பொலன்னறுவை மாவட்டச் செயலகத்தின் வருடாந்த செயற்றிறன் அறிக்கைகளும் கணக்குகளும்;

(vi) 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்கான அநுராதபுர மாவட்ட செயலகத்தின் செயற் திறன் அறிக்கைகளும் ஆண்டுக் கணக்குகளும்;

(vii) 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்கான ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்தின் செயலாற்றுகை அறிக்கைகளும் கணக்குகளும்;

(viii) 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்கான இரத்தினபுரி மாவட்ட செயலகத்தின் செயற்பாட்டு மற்றும் கணக்கு அறிக்கைகள்;

(ix) 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்கான நுவரெலியா மாவட்ட செயலகத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகளும் கணக்குகளும்;

(x) 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்கான கம்பஹா மாவட்ட செயலகத்தின் செயலாற்றுகை மற்றும் கணக்குகள் அறிக்கைகள்;

(xi) 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்கான வவுனியா மாவட்ட செயலகத்தின் வருடாந்த செயல்திறன் மதிப்பீட்டு அறிக்கைகளும் கணக்குகளும்;

(xii) 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்கான புத்தளம் மாவட்டச் செயலகத்தின் வருடாந்த செயலாற்றறிக்கைகள் மற்றும் கணக்குகள் அறிக்கைகள்;

(xiii) 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்கான பதுளை மாவட்டச் செயலகத்தின் செயற்றிறன் அறிக்கைகளும் வருடாந்த கணக்குகளும்;

(xiv) 2016 ஆம் ஆண்டுக்கான மொனராகல மாவட்ட செயலகத்தின் செயலாற்றுகை அறிக்கையும் கணக்குகளும்;

(xv) 2016 ஆம் ஆண்டுக்கான யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் வருடாந்த செயலாற்றுகை மற்றும் கணக்குகள் அறிக்கை;

(xvi) 2016 ஆம் ஆண்டுக்கான களுத்துறை மாவட்டச் செயலகத்தின் வருடாந்த செயல்திறன் அறிக்கை மற்றும் கணக்குகள்;

(xvii) 2016 ஆம் ஆண்டுக்கான மன்னார் மாவட்டச் செயலகத்தின் செயற்திறன் அறிக்கையும் வருடாந்த கணக்குகளும்;

(xviii) 2016 ஆம் ஆண்டுக்கான கண்டி மாவட்டச் செயலகத்தின் வருடாந்த செயலாற்றுகை மற்றும் கணக்கு அறிக்கை;

(xix) 2016 ஆம் ஆண்டுக்கான கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் செயற்திறன் அறிக்கை மற்றும் ஆண்டுக் கணக்கு அறிக்கையும்;

(xx) 2016 ஆம் ஆண்டுக்கான முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தின் வருடாந்த செயற்பாட்டு அறிக்கையும் கணக்குகளும்;

(xxi) 2016 ஆம் ஆண்டுக்கான குருணாகல் மாவட்டச் செயலகத்தின் செயலாற்றல் அறிக்கையும் கணக்குகளும்;

(xxii) 2016 ஆம் ஆண்டுக்கான திருகோணமலை மாவட்டச் செயலகத்தின் செயற்திறன் பெறுபேற்று அறிக்கையும் கணக்கும்;

(xxiii) 2016 ஆம் ஆண்டுக்கான மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தின் செயல்நிறைவேற்று மற்றும் கணக்கு அறிக்கை;

(xxiv) 2016 ஆம் ஆண்டுக்கான கொழும்பு மாவட்டச் செயலகத்தின் செயலாற்று மற்றும் கணக்கறிக்கை;

(xxv) 2016 ஆம் ஆண்டுக்கான மாத்தளை மாவட்டச் செயலகத்தின் செயற்றிறன் அறிக்கையும் ஆண்டுக் கணக்குகளும்; மற்றும்

(xxvi) 2016 ஆம் ஆண்டுக்கான உள்நாட்டலுவல்கள் அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையும் கணக்குகளும்

தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(2) இளைஞர், விளையாட்டுத்துறை, கலை மற்றும் மரபுரிமைகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ சீ.பீ. ரத்நாயக்க சார்பாக அக்குழுவின் உறுப்பினர் கௌரவ பிமல் ரத்னாயக்க அக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட,

(i) 2014 ஆம் ஆண்டுக்கான சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டடத்தொகுதி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை;

(ii) 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்கான தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வருடாந்த அறிக்கைகள்;

(iii) 2017 ஆம் ஆண்டுக்கான கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை;

(iv) 2017 ஆம் ஆண்டுக்கான கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் சாதனைகள் அறிக்கை;

(v) 2012 ஆம் ஆண்டுக்கான டவர் மண்டபத் திரையரங்கு மன்றத்தின் ஆண்டறிக்கையும் நிதிசார் கூற்றுக்களும்;

(vi) 2015 ஆம் ஆண்டுக்கான தொல்லியல் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கை;

(vii) 2017 ஆம் ஆண்டுக்கான தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை;

(viii) 2017 ஆம் ஆண்டுக்கான புத்தசாசன அமைச்சின் செயலாற்றுகை அறிக்கை;

(ix) 2017 ஆம் ஆண்டுக்கான பௌத்த மத அலுவல்கள் திணைக்களத்தின் செயற்திட்ட அறிக்கை; மற்றும்

(x) 2015 ஆம் ஆண்டுக்கான இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் செயலாற்றுகை பற்றிய அறிக்கை

தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(3) பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் சார்பாக அக்குழுவின் உறுப்பினர் கௌரவ ஹர்ஷண ராஜகருணா, அக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட,

(i) 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழான ஒழுங்குவிதிகள்;

(ii) 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்கான இலங்கை முதலீட்டுச் சபையின் வருடாந்த அறிக்கைகள்; மற்றும்

(iii) 2017 ஆம் ஆண்டுக்கான அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(4) அரசாங்க நிதி பற்றிய குழுவின் தவிசாளர் கௌரவ எம்.ஏ. சுமந்திரன் சார்பாக அக்குழுவின் உறுப்பினர் கௌரவ பிமல் ரத்நாயக்க, அக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட,

(i) சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டமூலம்;

(ii) மதுவரி (திருத்தச்) சட்டமூலம்;

(iii) சுயாதீன ஆணைக்குழுக்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்குச் செலுத்தப்படும் ஊதியங்கள் மற்றும் ஏனைய படிகள் பற்றிய பிரேரணை

தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**3. பொது மனுக்கள் சமர்ப்பித்தல் :**

(1) ரம்புக்கன, போதிராஜ மாவத்தை, மொட்டப்புலிய, இல. சீ 1/2 இல் வதியும் திரு. விஜேசூரிய ஆரச்சிகே திலகரத்னவினது 2018.03.27 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ ரீ.பீ. ஏக்கநாயக்க சமர்ப்பித்தார்.

(2) அலவ்வ, ரன்கெத் உயன எனும் முகவரியில் வதியும் திருமதி பி.எம்.எஸ்.எஸ். பிரேமரத்னவினது 2018.07.04 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ சனத் நிஷாந்த பெரேரா சமர்ப்பித்தார்.

30 (10) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கமைய மேற்படி மனுக்கள் பொது மனுக்கள் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**4. இருப்பிடக்கூறு சொத்தாண்மை (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம்:** இரண்டாம் மதிப்பீட்டுக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

"சட்டமூலம் இப்பொழுது இரண்டாவது முறையாக மதிப்பிடப் பெறுமாக" என வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் பிரேரித்தார்.

(பி.ப. 2.17 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலம் அதன் பிரகாரம் இரண்டாம் மதிப்பீடு செய்யப்பட்டது.

"சட்டமூலம் முழுப் பாராளுமன்றக் குழுவின் பரிசீலனைக்கு விடப்படுமாக" என வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உடனே பாராளுமன்றம் குழுவாக மாறியது.

(குழுநிலையில்)

பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.

1 முதல் 5 வரையான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும்:

சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலம் திருத்தங்களின்றி ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

"சட்டமூலம் இப்பொழுது மூன்றாவது முறையாக மதிப்பிடப் பெறுமாக" என வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதன்படி சட்டமூலம் திருத்தப்பட்டவாறு மூன்றாவது முறையாக மதிப்பிடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**5. நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.1 ):** வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் 58 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 26 ஆம் பிரிவு மற்றும் 30 ஆம் பிரிவின் கீழ் தகைமைபெற்ற ஆட்களைப் பதிவு செய்தல் தொடர்பில் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 பெப்ரவரி 05 ஆம் திகதிய 2057/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.07.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**6. நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2 ):** வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் 58 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 35 ஆம் பிரிவின் (1), (2) மற்றும் (4) ஆம் உட்பிரிவுகளின் கீழ் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் தொடர்பில் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 யூலை 10 ஆம் திகதிய 2079/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மூலம் திருத்தப்பட்டவாறான, 2018 பெப்ரவரி 05 ஆம் திகதிய 2057/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.07.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**7. நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.3):** வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் 58 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 45(2) ஆம் பிரிவின் கீழ் தொழில்நுட்பக் கணக்காய்வு நடவடிக்கைமுறை மற்றும் கட்டணங்கள் தொடர்பில் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 பெப்ரவரி 05 ஆம் திகதிய 2057/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.07.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**8. ஒத்திவைப்பு :** “இப் பாராளுமன்றம் இப்போது ஒத்திவைக்கப்படுமாக” என வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன்படி பி.ப. 3.06 மணிக்கு பாராளுமன்றம், 2018 ஆகஸ்ட் 09 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 10.00 வரை ஒத்திவைக்கப்பட்டது.